

மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் இந்திய நாட்டிய விழாவினை நேற்று (21.12.2025) அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், இரா.இராஜேந்தரன் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் க.செல்வம் எம்.பி., சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், செங்கல்பட்டு சார் ஆட்சியர் திருமதி எஸ். மாலதி ஹெலன், , தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் , மாமல்லபுரம் நகர மன்ற தலைவர் திருமதி வளர்மதி யஷ்வந்த் ராவ் , சுற்றுலாத்துறை இணை இயக்குனர் திருமதி அ.சிவப்பிரியா , தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி சி.லட்சுமி பிரியா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (20.122025) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரணீஸ்வரர் திருக்கோவிலில், சமுதாய பொருளாதார தொண்டுமன்றம் சார்பில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி, தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் வளாகத்தில்

# “இந்திய நாட்டிய விழா”

## அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன் – இரா. இராஜேந்திரன் தொடங்கி வைத்தனர்!

சென்னை,டிச.22-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு சுற்றுலாத் துறை மாபெரும் வளர்ச்சி பெற்றுள்ளது.

தமிழ்நாடு, உலகின் பழம்பெருமைகள் கொண்ட கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளின் கீழடி போன்ற வரலாற்றச் சிறப்புகளின் தாயகமாக விளங்குகிறது. தமிழ்நாட்டின் தொல்லியல் துறையால் அங்கரிக்கப்பட்ட உலக பாரம்பரிய சின்னங்கள் மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், ரதங்கள் மற்றும் சிற்பங்கள், தஞ்சை பெரிய கோயில், தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம், நீலகிரி பாரம்பரிய மலை ரயில், மற்றும் மேற்குச் தொடர்ச்சி மலை, செஞ்சி கோட்டை ஆகியவற்றை ‘யுனெஸ்கோ’ அமைப்பு உலக பாரம்பரிய நினைவுச் சின்னங்களாக அறிவித்துள்ளது.

சர்வதேச சுற்றுலாத் தலமாக வளர்ச்சிப் பெற்றுள்ள மாமல்லபுரம், 7-ஆம் நூற்றாண்டில் பல்லவர் கால முக்கிய துறைமுகமாக விளங்கிய நகரமாகும். மாமன்னன் மகேந்திர வர்ம பல்லவன் படைத்தளித்த மாமல்லபுரம் கலைச்செல்வங்கள் பலநூறு ஆண்டுகள் கடந்தும், உயிர்ப்புடன் அழகு மிளிர மணற் பரப்பில் எழுந்து நிற்கும் வரலாற்று மகத்துவமாகும்.

மாமல்லபுரம் கட்டிடக் கலையின் அருங்காட்சியகமாக திகழ்கிறது. இங்குவங்கக் கடலோரத்தில் ஒரு கற்கோயில், திறந்தவெளிச் சிற்பம், குடை வரைக்கோயில், ஒற்றைக் கல் சிற்பங்கள் ஒரே இடத்தில் காணகிடைக்கும் அற்புதமாகும். இதன் காரணமாக இந்தியாவில் அதிக அளவில் வெளிநாட்டுப் பயணிகள் வருகை தரும் இடமாக மாமல்லபுரம் விளங்கிவருகிறது.

சுற்றுலா பயணிகளின் வருகையினை அதிகரிக்கவும், தமிழ்நாட்டில் நீண்ட நாட்கள் தங்கி சுற்றுலாத் தலங்களை பார்வையிடவும் தமிழநாட்டின் கலைகளின் தொன்மையை உணர்த்தும் வகையில் கடல் அருகிலேயே கலைநயம் கொண்ட சிற்பச் சூழலில் தமிழ்நாடு அரசால் ‘மாமல்லபுரம் நாட்டிய விழா’ 1992ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, பிறகு இந்திய நாட்டிய விழாவாக 2009 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு (2025) இந்திய நாட்டிய விழா மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் வளாகத்தில் 21.12.2025 முதல் 19.01.2026 வரை நடைபெறஉள்ளது.

இந்திய நாட்டிய விழாவில் இந்திய நாட்டியங்களில் சிறப்பான பரத நாட்டியம், மோகினி ஆட்டம், கூடியாட்டம், ஒடிசி, கதக்களி, குச்சிப்புடி மற்றும் கிராமியக் கலைகளான கரகம், காவடி, தப்பாட்டம், ஒயிலாட்டம், போன்ற 150க்கும் மேற்பட்ட குழுக்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

சுற்றுலாப் பயணிகள் - குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்த நாட்டிய விழாவினை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து வருகைதந்து கண்டுகளித்து பயன்பெறும் வகையில் ‘இந்திய நாட்டியத் திருவிழா’ திகழ்கிறது.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் , சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ் , செங்கல்பட்டு சார் ஆட்சியர் திருமதி எஸ். மாலதி ஹெலன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் , மாமல்லபுரம் நகர மன்ற தலைவர் திருமதி.வளர்மதி யஷ்வந்த் ராவ், சுற்றுலாத்துறை இணை இயக்குனர் திருமதி அ.சிவப்பிரியா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி சி.லட்சுமி பிரியா, மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி தலைமை! இரா.வினோத் வரவேற்புரை!

# வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் இசையரங்கம்!

## எஸ்,ஏ.ராஜ்குமார் - சின்னபொண்ணு - முகேஷ் - மாலதி - செந்தில் தாஸ் - சொற்கோ கருணாநிதி பாட்டிசைக்கின்றனர்! டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச. 22 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் ஒன்றிய இளைஞர் அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு "காலத்தின் கண்ணாடி உடன்பிறப்புகளின் உயிர்நாடி" இசையரங்கம் இன்று (22.12.2025 திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு, அயப்பாக்கம் வாட்டர் டேங்க் அருகில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா. வினோத் வரவேற்புரை ஆற்றுகிறார்.

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி தலைமை வகிக்கிறார்.

எஸ்.பி.அருள், ந. ஜெயச்சந்திரன், எம். ஜி.சாமிநாதன், ஏ.எம். யுவராஜா, ஆர்.கௌரி சங்கர், என்.ரவி, க.சங்கர், மாறன் கே.எஸ். குமார், கு.சதீஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

இசையரங்கில் எஸ்.ஏ.ராஜ்குமார், சின்னபொண்ணு, முகேஷ், மாலதி, செந்தில் தாஸ், சொற்கோ கருணாநிதி ஆகியோர் பாட்டிசைக்கின்றனர்!

இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம். எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வடக்கு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, தொகுதிப் பார்வையாளர் பி.டி.பாண்டிச்செல்வம், எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, ஏ. எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.அருணாச்சலம், இராமாபுரம் வ.செல்வகுமார், எஸ். பத்மப்ரியா, க.தன சேகரன் எம்.சி, காசி முத்து மாணிக்கம், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், எஸ். குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பா.வாசுகி பாண்டியன், எஸ்.பாஸ்கரன், சைதை மா.அன்பரசன், அ.ம.துரைவேலு, என். தனசேகரன் மற்றும் பகுதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் டி.ஐசக் நேசகுமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஏ.சுந்தரமூர்த்தி ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.


